ALPHA MIND POWER
# NEWSLETTER



OCTOBER 2019

## *From Guruji's desk....*

My dear Alpha Siddha,

Writing to you with a lot of love and blessings.

Season's greetings to all of you. I am sure you are busy celebrating all the festivals lined up this month. Festivals are great. Every festival has its own importance and meaning. Enjoy every festival as much as you can. That is the way to life live.

With Navarathri and Deepavali, we enjoy eating sweets, wearing new dresses, visiting people, entertaining guests. Yes, there is a lot of merriment in the air.

With all this celebration, we must also think about what should happen within us during these festivals. All the nine days of Navarathri we worship Devi in her different forms. With each day we should also experience a purification process happening within us. That is the most important point to think about during this festival.

Even with regular meditation, some unwanted thought forms, negative emotions, uncontrollable ego etc. can still lurk somewhere within us. If we look within us honestly, we will be able to acknowledge these dark energies within us. Throw them out and purify yourselves.

In every class I remind our Alpha Siddhas to mentally say the slogan **"Every human being generates only positive thoughts".** We should remember that any change that we want to create in the society should always begin with us.

So, examine your thoughts, your emotions, your reactions and responses. Wherever you feel you need to change something, do it immediately. Every day brings us a lot of learning. No matter how old you are, you should never hesitate to change.



Once you have looked within yourself and created changes there, focus on your house. The energy of the place where you live is the basic factor which affects your life. See what you can do about that. If the place has to be cleaned physically, this is the time to get it done. If the energy of the place has to be increased, take some action. Are you wondering how to do this? Here is an action plan.

1. Meditate every day in the house. This will improve the energy of the house without any doubt.
2. Practice our **'Negative Emotions Removal'** meditation often and purify yourself.
3. Chant mantras, particularly Navakshari mantra, every day.
4. Play our **Energy Cleansing Music** daily in the house.
5. If you have attended our **Psychic Energy class**, use all the methods I have given you there to clear negative energies from the house and improve the energy. Use lemon, herbal powder, yantra etc. Check the energy with the pendulum to see the changes.
6. Give away things which you have not used for the last one year. You may never use them again. But keeping them unused certainly gives rise to negative energy only.

The struggle against negative energy is a continuous challenge. Pull yourself up and put up a good fight. You will be surprised to see the changes even with a little bit of effort. All that is required is that you are focused and regular in whatever you take up.
Wishing you wonderful meditations, great energy and a very Happy festival season.

Blessings,
**Srimatha**

### <u>மொபைல் ஆப்பில் ஆன்லைன் வகுப்புகள்</u>

ஆல்ஃபா தியானம் (கட்டம் -1) மற்றும் செல் ஒளி தியானம் (முன்பு கட்டம் 2) வகுப்புகள் இப்பொழுது நமது **'ALPHA MIND POWER'** மொபைல் ஆப்பில் பெறலாம்.

ஆங்கிலம் மற்றும் தமிழில் கிடைக்கும்.

வீட்டிலிருந்தபடியே இந்த வகுப்புகளை கண்டு தியானங்களை நீங்கள் பழகலாம்.

இந்த ஆப் தற்பொழுது ஆண்டிராய்டு மற்றும் ஐஃபோனிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### <u>ONLINE CLASSES ON MOBILE APP</u>

We are happy to announce that our Alpha Meditation (Level -1) and Cell Glow Meditation (earlier Level 2) are now available as online classes on our mobile App **ALPHA MIND POWER.**

They are available in English and Tamil.

You can view the classes and do the meditations from your home.

The App is now available on Android and iOS versions..

என் அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

மிகுந்த அன்புடன் ஆசியுடன் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

உங்களுக்கு எனது விழாக்கால வாழ்த்துக்கள். இம்மாதம் ஒவ்வொன்றாக வரும் பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருப்பீர்கள். ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு, ஒரு அர்த்தம் உண்டு. ஒவ்வொரு பண்டிகையையும் முடிந்த வரை கொண்டாடி மகிழுங்கள். அப்படி வாழ்வது தான் வாழ்க்கை.

நவராத்திரி மற்றும் தீபாவளி பண்டிகைகளில் நாம் இனிப்பு உண்டு மகிழ்கிறோம், புதிய உடைகள் அணிகிறோம், பலரது வீட்டிற்கு சென்று வருகிறோம், நம் வீட்டிற்கும் விருந்தினர்களை அழைத்து உபசரிக்கிறோம். ஆம், காற்றிலேயே ஒரு விதமான கொண்டாட்டம் கலந்திருக்கும் காலமிது.

இத்தனை கொண்டாட்டத்திற்கு இடையில் இந்த பண்டிகை காலத்தில் நமக்குள் ஏற்பட வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் நாம் சற்று சிந்திக்க வேண்டும். நவராத்திரி சமயத்தில் தினமும் தேவியை வெவ்வேறு ரூபங்களில் வணங்குகிறோம். அதே சமயம் ஒவ்வொரு நாளும் நமக்குள் இருக்கும் அழுக்குகள் கரைந்து நாம் தூய்மைபடுத்தப் படுவதையும் உணர வேண்டும். இந்த பண்டிகையை கொண்டாடும்பொழுது இது நாம் மனதில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் ஆகும்.

தொடர்ந்து தியானம் செய்து வந்தாலும், நமக்குள் நாம் அறியாமலேயே எங்கோ சில தேவையற்ற எண்ணங்கள், தீய உணர்வுகள், கட்டுப்படுத்த முடியாத அகம்பாவம் இதெல்லாம் இருக்க வாய்ப்புண்டு. உண்மையுடன் நமக்குள் பார்த்தோமானால் இவற்றை நம்மால் ஒப்புக் கொள்ள முடியும். அவற்றை வெளியில் வீசி விடுங்கள். உங்களை புனிதப் படுத்திக் கொள்ளுங்கள்.

‘**ஒவ்வொரு மனமும் நல்ல எண்ணங்களை மட்டுமே உருவாக்குகிறது**’. இந்த வாக்கியத்தை தவறாமல் சொல்லி வருமாறு ஒவ்வொரு வகுப்பிலும் ஆல்ஃபா சித்தர்களை நான் ஊக்குவித்து வருகிறேன். சமூகத்தில் நாம் காண விரும்பும் எந்த ஒரு மாற்றமும் நம்மிடம் இருந்தே துவங்க வேண்டும் என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

அதனால் உங்கள் எண்ணங்கள், உணர்வுகள், நடவடிக்கைகள் அனைத்தையும் கவனியுங்கள். அவற்றில் ஏதேனும் மாற்றம் வேண்டும் என்று தோன்றினால் உடனடியாக அதை செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் நமக்கு நிறைய படிப்பினைகள் கிடைக்கின்றன. எத்தனை வயதானாலும் கற்றுக் கொள்ளவும் மாற்றிக் கொள்ளவும் தயங்க கூடாது.

உங்களுக்குள் தேவையான மாற்றங்களை உருவாக்கிய பின்னர், அடுத்து உங்கள் வீட்டை கவனியுங்கள். நீங்கள் குடியிருக்கும் இடத்தின் சக்தி தான் உங்களை அதிகமாக பாதிக்க கூடிய விஷயம். அதில் என்ன செய்ய முடியும் என்று பாருங்கள். வீட்டை சுத்தம் செய்ய வேண்டி இருந்தால் முதலில் அதை செய்து முடியுங்கள். வீட்டின் சக்தியை அதிகப்படுத்த வேண்டி இருந்தால் அதையும் செய்யுங்கள். என்ன செய்யலாம் என்று யோசிக்கிறீர்களா? இதோ சில யோசனைகள்.

1. தினமும் தியானம் செய்யுங்கள். இது வீட்டின் சக்தியை நிச்சயம் அதிகரிக்கும்.
2. நமது “**தீய உணர்வுகள் களைதல்**” தியானத்தை அடிக்கடி கேட்டு உங்களை தூய்மைபடுத்திக் கொள்ளுங்கள்.
3. தினமும் மந்திரங்கள் சொல்லுங்கள், குறிப்பாக நவாக்ஷரி மந்திரம்.
4. தினமும் வீட்டில் ‘**எனர்ஜி கிளென்சிங் மியுசிக்**’ ஒலிக்க செய்யுங்கள்.
5. நமது **சைகிக் எனர்ஜி** வகுப்பில் கலந்து கொண்டிருந்தால் அதில் நான் சொல்லிக் கொடுத்திருக்கும் பல வழி முறைகளை பயன்படுத்தி வீட்டில் உள்ள தீய சக்திகளை களைந்து நல்ல சக்தியை அதிகப்படுத்துங்கள். எலுமிச்சை, மூலிகை பொடி, யந்திரம் ஆகியவற்றை பயன்படுத்துங்கள். பெண்டுலம் மூலம் மாற்றங்களை அளந்து பாருங்கள்.
6. கடந்த ஒரு வருடத்தில் நீங்கள் பயன்படுத்தாத பொருட்களை யாருக்கேனும் கொடுத்து விடுங்கள். எதிர்காலத்திலும் நீங்கள் அதை பயன்படுத்துவது அரிதாக இருக்கலாம். ஆனால் உபயோகப்படுத்தாத பொருட்களை வைத்திருந்தால் நிச்சயம் தீய சக்தி உருவாக வாய்ப்பு இருக்கிறது.

தீய சக்திகளை எதிர்த்து போராடுவது என்பது முடிவற்ற ஒரு விஷயம் தான். உங்களை தயார் படுத்திக் கொண்டு நன்கு செயல்படுங்கள். சிறிய அளவில் செயல்பட்டால் கூட நல்ல மாற்றங்களை கண்டு ஆச்சரியப் படுவீர்கள். இதில் முக்கியம் என்னவென்றால் நீங்கள் எதை செய்தாலும் அதை தொடர்ந்து செய்ய வேண்டும் மனதை ஒரு நிலைப்படுத்தி செய்ய வேண்டும்.

உங்கள் தியானங்கள் சிறக்கட்டும், சக்தி கூடட்டும், பண்டிகைகள் இனிக்கட்டும்.

ஆசீர்வாதங்கள்,
**ஸ்ரீமாதா**

I joined in my first job about a year back. I was very nervous and scared and each day was a nightmare. Whatever I did went wrong. I became very negative and wanted to resign. Then my mother suggested **Alpha Music Therapy**. I requested Guruji by mail and got it. I started listening to it. It was really miraculous. Within 2 days I became very calm and composed. Today I am going to work very happily and am very successful in everything. Million thanks to Guruji!

***Ranjani***

ஒரு வருடம் முன்னால் எனது முதல் வேலையில் சேர்ந்தேன். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் சிம்ம சொப்பனமாக இருந்தது. நான் எந்த வேலை செய்தாலும் தப்பாகிவிட்டது. மனம் நெகடிவாகிவிட்டது. ராஜினாமா செய்யத் தோன்றியது. பிறகு எனது அம்மா தான் **ஆல்ஃபா மியுசிக் தெரபி** எடுத்துக்கொள்ள சொன்னார்கள். குருஜிக்கு மெயில் எழுதி பெற்றுக் கொண்டேன். கேட்க ஆரம்பித்தேன். ஆச்சரியமாக இருந்தது. இரண்டு நாட்களிலேயே மிகவும் அமைதியாகி விட்டேன். இன்று நான் சந்தோஷமாக வேலைக்கு செல்கிறேன். எது செய்தாலும் வெற்றி தான். குருஜிக்கு கோடி நன்றி ! **ரஞ்சனி**

My husband started a textile shop 1 year back. Last year it was profitable. But this year the business went into difficulties. I attended **'Psychic Energy'** class and practiced. With the help of the pendulum I understood that there was negative energy in the shop and I removed it. And Guruji had taught about water & Prithyankira yantram technique. I used that technique in my shop. After this the negativities had been cleared. Now, the business is doing very well. Next month we have planned to expand our shop. Thanks to Alpha! Thanks to Guruji! **Laksha**

I attended **Psychic Energy** class on 20.1.19 in Chennai. In the class we measured energy levels of our house with pendulum as taught by our Guruji. My pendulum showed positive on all the rooms except near the entrance. After the class, I came home and measured once again. The result was same. Then I noticed a letter cum key holder on the wall. I removed all the keys and checked again. To my surprise it showed positive. I carefully checked each and every key and finally found all the key chains showed negative. I replaced them with new ones. Now the pendulum shows positive on all sides. Thanks to our Guruji for giving such a wonderful tool and Alpha. **Sudha**

I have attended all the Alpha classes. The best one I like is **Amrut Siddhi**. This meditation is really amazing. Now when I think about it, I look much younger than before. Many of my relatives are commenting about this. I am also feeling more energy. DNA activation is really working! Long live our Guruji*!*

**Dhanalakshmi**

I have completed 3 levels in Alpha. I had pain in my throat because of thyroid problem. I found it very difficult to talk. Then, I joined **'Amrut Siddhi'** class. In that class Guruji taught us very beautifully and clearly how to activate our DNA. My throat pain disappeared completely after that! Thanks to Guruji and Alpha!

**Parvathy**

I am very amazed at the effect of **Sanjeevani**. I attended it a few months ago. I listen to the meditation every night, as recommended by Guruji. I suddenly realized that my overall health had actually improved. Previously I had been doing some yoga, but the movements were never complete. Now I can bend fully. I do not feel tired. In fact, I feel very healthy. My doctor's visits have completely stopped. Thank you Guruji **Santhanam**

என் கணவர் சென்ற வருடம் ஜவுளி வியாபாரம் செய்யத் துவங்கினார். ஆரம்பத்தில் நல்ல லாபம் கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு வியாபாரத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டது. நான் **சைகிக் எனர்ஜி** வகுப்பில் கலந்து கொண்டு பெண்டுலம் மூலம் தீய சக்தி இருப்பதை தெரிந்து அவற்றை அப்புறப்படுத்தி விட்டேன். மேலும் குருஜி சொல்லிய படி தண்ணீரையும், ப்ரித்யங்கிரா யந்திரத்தையும் பயன்படுத்தியதால் கடையில் உள்ள தீய சக்தி நீங்கியது. இப்பொழுது வியாபாரம் அமோகமாக இருக்கிறது. அடுத்த மாதம் கடையை விரிவுபடுத்தவுள்ளோம். ஆல்ஃபாவிற்கும், குருஜிக்கும் நன்றிகள் பல! **லக்ஷா**

நான் சென்னையில் நடந்த **சைகிக் எனர்ஜி** வகுப்பில் கலந்துகொண்டேன். வகுப்பில் குருஜி வீட்டின் சக்தியை பெண்டுலம் மூலம் எப்படி அளப்பது என்பதை கற்றுக்கொடுத்தார். நானும் அவ்வண்ணமே வீட்டில் உள்ள அனைத்து அறைகளையும் அளந்து பார்த்தபொழுது வீட்டின் வாசலைத் தவிர அனைத்தும் நல்ல சக்தியைக் காட்டியது. மீண்டும் வீட்டிற்குச் சென்று பெண்டுலம் மூலம் பார்க்கும்பொழுது தான் வீட்டின் வாசலில் சாவிகள் மாட்டும் ஸ்டாண்டில் தீய சக்தி இருப்பதை தெரிந்துகொண்டு அதை அப்புறப்படுத்தி புதிய ஸ்டாண்ட் வாங்கி வைத்தேன். இப்பொழுது என் வீட்டின் சக்தி முற்றிலும் நல்ல சக்தியாக மாறியதை பெண்டுலம் மூலம் தெரிந்துகொண்டேன். இந்த அரிய கருவியை நமக்கு உபயோகிக்க கற்றுக்கொடுத்த குருஜிக்கு நன்றி! **சுதா**

நான் ஆல்ஃபா வகுப்புகள் அனைத்தையும் முடித்து விட்டேன். எனக்கு மிகவும் பிடித்தது **அம்ருத சித்தி** தான். இந்த தியானம் ஆச்சரியமாக இருக்கிறது. இப்பொழுது யோசித்து பார்த்தால் நான் முன்பை விட இளமையாக தெரிகிறேன். எனது உறவினர்கள் பலர் இதை சொல்லி விட்டார்கள். எனக்கும் அதிக சக்தியை உணர முடிகிறது. DNA ஆக்டிவேஷன் உண்மையில் வேலை செய்கிறது. நீடூழி வாழ்க குருஜி! **தனலக்ஷ்மி**

ஆல்பாவில் 3 நிலைகளை முடித்துள்ளேன். தைராய்டு பிரச்சினை காரணமாக எனக்கு தொண்டையில் வலி ஏற்பட்டது. பேசுவது மிகவும் கடினமாக இருந்தது. பின்னர், நான் **'அம்ருத் சித்தி'** வகுப்பில் சேர்ந்தேன். அந்த வகுப்பில் குருஜி டி.என்.ஏயை ஊக்குவிப்பதை மிக அழகாகவும் தெளிவாகவும் கற்றுக் கொடுத்தார். அதன் பிறகு என் தொண்டை வலி முற்றிலும் மறைந்துவிட்டது! குருஜி மற்றும் ஆல்பாவுக்கு நன்றி! **பார்வதி**

**சஞ்சீவனியின்** பலனைப் பார்த்து நான் மிகவும் வியப்படைகிறேன். சில மாதங்களுக்கு முன்பு நான் அதில் கலந்துகொண்டேன். குருஜி பரிந்துரைத்தபடி நான் ஒவ்வொரு இரவும் தியானத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எனது ஆரோக்கியம் உண்மையில் முழுமையாக மேம்பட்டுள்ளது என்பதை இப்போது திடீரென்று உணர்ந்தேன். முன்பு நான் சில யோகாசனங்கள் செய்து கொண்டிருந்தேன், ஆனால் முழுமையாக வளைய முடியாமல் இருந்தது. இப்போது என்னால் முழுமையாக வளைய முடிகிறது. சோர்வு ஏற்படுவதில்லை. உண்மையில் நான் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறேன். டாக்டரை சந்திப்பது முற்றிலும் நின்று விட்டது.நன்றி குருஜி! **சந்தானம்**



*Guruji with Alpha Siddhas at Alpha Level-1 class at Chennai on 29.09.2019*



*Guruji with Alpha Siddhas at Kundalini Mahashakthi class at Chennai on 28.09.2019*

**ANNOUNCEMENT**

**'KELAI MANAME'**

GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !

7.45 am Monday to Friday

You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

---

**அறிவிப்பு**

**'கேளாய் மனமே'**

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 7.45 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை

மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

**ALPHA MIND POWER - MOBILE APP**

Download the app and register. You can make advance payment for class through mobile app **ALPHA MIND POWER**

**ஆல்ஃபா மைண்ட் பவர் - மொபைல் ஆப்**

**ALPHA MIND POWER** மொபைல் ஆப் மூலமாக வகுப்பிற்கு முன் பணம் செலுத்தலாம்.

## WORKSHOP SHEDULE

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Madurai (Tamil) | **PSYCHIC ENERGY AMRUT SIDDHI** | 12/10/2019 13/10/2019 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel GRT Regency 38, Madakulam Rd, Palanganatham, Madurai. |
| Salem (Tamil) | **PSYCHIC ENERGY SANJEEVANI** | 19/10/2019 20/10/2019 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Grand Estancia Bangalore Bypass Road, Salem. |
| Goa (English) | **CELL GLOW – KARMA DOSHA REMOVAL AMRUT SIDDHI** | 02/11/2019 03/11/2019 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Mandovi, D B Marg, Panaji, Goa |
| Mumbai (English) | **AMRUT SIDDHI ANUBANDHAM** | 09/11/2019 10/11/2019 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Kohinoor, Andheri-Kurla Road, JB Nagar Andheri- East, Mumbai- 400059 |
| Chennai (Tamil) | **SRIVIDYA AGNIKUNDAM** | 16/11/2019 17/11/2019 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |
| Bangalore (English) | **CHAKRA MEDITATION AGNIKUNDAM** | 23/11/2019 24/11/2019 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | The Rialto Hotel, No.20-21, Seshadri Road, Bangalore 560009 |
| Chennai (Tamil) | **SPIRITUAL COUNSELING** | 30/11/2019 01/12/2019 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |

*Printed & Published for*


*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841272146*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*


***PRINTED MATERIAL***